

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 07.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | அம்பாசமுத்திரம் | தேரடித் திடல் அருகில், கல்லிடைக்குறிச்சி | இந்திரகுமார் தேரடி, செல்வ ஜெயந்தி |
| 2 | 07.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | கீழ்பென்னாத்தூர் | பேருந்து நிலையம் அருகே | தமிழ் காமராசன், ச.பேரரசன் |
| 3 | 07.03.2025 | திருவண்ணாமலை தெற்கு | செங்கம் | ராஜவீதி, செங்கம் | சௌமியன் வைத்தியநாதன், வி.பாலமுருகன் |
| 4 | 07.03.2025 | விருதுநகர் வடக்கு | விருதுநகர் | சங்கரலிங்கபுரம் | மதுரை பாலா, க.திருச்செல்வன் |
| 5 | 08.03.2025 | மதுரை தெற்கு | திருப்பரங்குன்றம் | பனையூர் பேருந்து நிலையம் | இந்திரகுமார் தேரடி, தெ.வர்ஷினி |
| 6 | 08.03.2025 | திருநெல்வேலி கிழக்கு | இராதாபுரம் | செட்டிகுளம் பேருந்து நிறுத்தம் அருகில் | மதுரை பாலா, சகாய பெபிளா |
| 7 | 08.03.2025 | சேலம் மத்திய | சேலம் வடக்கு | கோரிமேடு, அஸ்தம்பட்டி | வழக்கறிஞர் ஐ.பரந்தாமன் எம்.எல்.ஏ., செ.யோக ஸ்ரீ |
| 8 | 08.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி | ரிசர்வ் லைன், ஆனையூர் பஞ்சாயத்து, சிவகாசி | முனைவர் **இரா.தி.சபாபதி மோகன்,** பா.முனீஸ்வரி |
| 9 | 09.03.2025 | தூத்துக்குடி வடக்கு | தூத்துக்குடி | சிதம்பரம் நகர் பேருந்து நிலையம், பாளை சாலை | **பொன்.முத்துராமலிங்கம்,** சஞ்சய் |
| 10 | 09.03.2025 | சேலம் மத்திய | சேலம் தெற்கு | கொண்டலாம்பட்டி ரவுண்டானா | வழக்கறிஞர் சரவணன் அண்ணாதுரை, சூரியபிரகாஷ் |
| 11 | 09.03.2025 | விழுப்புரம் தெற்கு | திருக்கோவிலூர் | திருவெண்ணைநல்லூர் | மாண்புமிகு **கோவி.செழியன்,** ச.கீர்த்தனா |
| 12 | 10.03.2025 | சேலம் மத்திய | சேலம் மேற்கு | கோட்டக் கவுண்டம்பட்டி, ஓமலூர் | வழக்கறிஞர் சிவ.ஜெயராஜ், வெ.சரண்யா |
| 13 | 10.03.2025 | விழுப்புரம் மத்திய | விழுப்புரம் | கோலியனூர் | டான் அசோக், த.இன்பக்குமாரன் |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 04–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், தாட்கோ தலைவர்.உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனசந்திரன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) திருவாரூர் மாவட்டம் பழவனக்குடி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களை சந்தித்து கலந்துரையாடினார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனசந்திரன் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.